# ஜனவரி – 29 – செவ்வாய்

**புனித பிரான்சிஸ சலேசால்**

**ஆண்டவர் மீது நம்பிக்கை கொண்டவரே பேறுபெற்றவர்.**
**திபா. 40:4**

## முதல் வாசகம் : எபிரேயர் 10 : 1 – 10

சகோதரர் சகோதரிகளே! வரப்போகும் நலன்களின் உண்மை உருவைத் திருச்சட்டம் எடுத்துக்காட்டவில்லை அது அவற்றின் நிழலாக மட்டுமே உள்ளது. எனவேதான், ஆண்டுதோறும் இடைவிடாமல் செலுத்தப்படும் அதே பலிகளால் வழிபட வருபவர்களை நிறைவுள்ளவர்களாக்க அதற்கு வலிமையில்லை. அவ்வாறு இருந்திருந்தால், பலி செலுத்துவது நின்றிருக்கும் அல்லவா? ஏனெனில், வழிபடுபவர்கள் ஒரே முறையில் தூய்மை அடைந்திருந்தால், பாவத்தைப்பற்றிய உணர்வே அவர்களிடம் இராதே! மாறாக, பாவங்கள் நீங்கவில்லை என்பதை அந்தப் பலிகள் ஆண்டுதோறும் நினைவுபடுத்திக்கொண்டேயிருக்கின்றன. ஆம், காளைகள், வெள்ளாட்டுக் கடாக்கள் இவற்றின் இரத்தம் பாவங்களைப் போக்கமுடியாது. அதனால்தான் கிறிஸ்து உலகிற்கு வந்தபோது, ”பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பவில்லை, ஆனால் ஓர் உடலை எனக்கு அமைத்துத் தந்தீர். எரிபலிகளும் பாவம் போக்கும் பலிகளும் உமக்கு உகந்தவையல்ல. எனவே நான் கூறியது என் கடவுளே, உமது திருவுளத்தை நிறைவேற்ற, இதோ வருகின்றேன். என்னைக் குறித்துத் திருநூல் சுருளில் எழுதப்பட்டுள்ளது” என்கிறார். திருச்சட்டப்படி செலுத்தப்பட்ட போதிலும் ”நீர் பலிகளையும் காணிக்கையையும் எரிபலிகளையும் பாவம்போக்கும் பலிகளையும் விரும்பவில்லை இவை உமக்கு உகந்தவையல்ல” என்று அவர் முதலில் கூறுகிறார். பின்னர் ”உமது திருவுளத்தை நிறைவேற்ற, இதோ வருகின்றேன்” என்கிறார். பின்னையதை நிலைக்கச் செய்ய முன்னையதை நீக்கிவிடுகிறார். இந்தத் திருவுளத்தால்தான் இயேசு கிறிஸ்து ஒரே ஒருமுறை தம் உடலைப் பலியாகச் செலுத்தியதின் மூலம் நாம் தூயவராக்கப்பட்டிருக்கிறோம்.

**பதில்பாடல் :** உமது திருவுளம் நிறைவேற்ற கடவுளே இதோ வருகிறேன்.

## நற்செய்தி : மாற்கு 3 : 31 - 35

அக்காலத்தில் இயேசுவுடைய தாயும் சகோதரர்களும் வந்து வெளியே நின்றுகொண்டு அவரை வரச்சொல்லி ஆள் அனுப்பினார்கள். அவரைச் சூழ்ந்து மக்கள் கூட்டம் அமர்ந்திருந்தது. ”அதோ, உம் தாயும் சகோதரர்களும் சகோதரிகளும் வெளியே நின்று கொண்டு உம்மைத் தேடுகிறார்கள்” என்று அவரிடம் சொன்னார்கள். அவர் அவர்களைப் பார்த்து, ”என்தாயும் என் சகோதரர்களும் யார்? என்று கேட்டு, தம்மைச் சூழ்ந்து அமர்ந்திருந்தவர்களைச் சுற்றிலும் பார்த்து, ”இதோ! என் தாயும் என் சகோதரர்களும் இவர்களே. கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே என் சகோதரரும் சகோதரியும் தாயும் ஆவார்” என்றார்.

**தியானம் :** மனமாற்றம் என்பது எம் ஒவ்வொருவருக்கும் முக்கியமானது. அதற்காக நாங்கள் புதுப்படைப்பாக மாறவேண்டி தூய ஆவியானவரின் வரங்களால் நிரம்பிட வேண்டுமென்று இன்றைய தியான வாசகங்கள் அழைத்து நிற்கின்றது. இறைவனது அரசிற்குள் சென்று அவர் பந்தியில் அமர்ந்து கொள்ள வேண்டுமாயின் அதற்க்கு தகுதியானவர்களாக இருக்கின்றோமா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டியவர்களாக உள்ளோம். முதல் வாசகத்தில் பார்பது போன்று பேதுருவின் அறிவுரைகளைக் கேட்டவர்கள் இறைவனிடம் ஒருமித்து வேண்டினார்கள். அப்பொழுது அவர்கள் இருந்த இடம் அதிர்ந்தது. அவர்கள் ஆவியானவரால் நிரப்பப்பட்டார்கள் என்று வேதாகமத்தில் பார்க்கின்றோம். ஆனால் அவர்கள் அப்படியே இருந்துவிடவில்லை. நற்செய்தியை அறிவித்தார்கள், மனமாற்றத்திற்காக மற்றவர்களையும் ஆயத்தப் படுத்தினார்கள். நாங்களும் திருமுழுக்கு என்னும் அருட்சாதனத்தின் மூலம் நீரினாலும், ஆவியினாலும் நிரப்பப்பட்டுள்ளோம். ஆனால் வளர்ந்து வரும் காலங்களில் எவ்வாறான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்?, அவர் பணிக்காக எங்களை அர்ப்பணித்துள்ளோமா? என்று சிந்தித்துப் பார்ப்பதில்லை, அன்று திருமுழுக்கு யோவான் மனமாற்றம் அடையும்படி மக்களுக்கு நீரினால் திருமுழுக்கு கொடுக்கின்றார். ஆனால் நான் நீரினால் திருமுழுக்கு கொடுக்கின்றேன் எனக்குப்பின் வருபவரோ நீரினாலும், ஆவியினாலும் திருமுழுக்கு கொடுப்பார் என்று அறிவித்தார். இன்று வீட்டுக்கு வீடு. நாட்டுக்கு நாடு பல பிரச்சனைகளும், சண்டை சச்சரவுகளும் காரணம் பகைமை உணர்வுகளும், விட்டுக்கொடுக்காத தன்மையுமேயாகும். நாங்கள் மனமாறாமல் அப்படியே வாழ்ந்து கொண்டிருப்பதே அவ்வாறான அழிவுகளுக்கு காரணம். எனவே எமது மனதை மாற்றிக் கொண்டு மறுபடியும் கிறிஸ்துவுக்குள் புதுப்படைப்பாக மாறுவோம். அன்பினைப் பகிர்ந்து புதுவாழ்வைப் பெற்றுக்கொள்ள எங்களைத் தயார்படுத்துவோம்.